# TELO NEWS

# LONDON

FEB/ 1986

ISSUE : 7

30p

## our view

## NO MORE RUNNING

*Up until 1983 July the periodical but violent anti-Tamil campaings in the South made Tamils to flee as Refugees to their homelands and to foreign countries.*

*Since 1981 the Tamil homelands are under military seige and occupied with increasing military presence.*

*Lately, under the guise of a military victory over the Liberation fighters, the government is engaged on large scale massacre of civilians using heavy military hardwares including Midget war planes and helicopter gunships.*

*Nowhere Tamils can flee anymore nor do they intend to flee to South as Mr.Athulathmuthali has been envisaging.*

*Tamils have had enough running in the last 40 years or so and now they categorically say to the government of Sri Lanka: DAMN YOUR CONSTITUTIONAL EXCUSES!*

*EELAM IS NOT NEGOTIABLE. THE MINIMUM DEMANDS WE AGREED TO HAVE TALKS ON AT THIMBU STANDS.*

*WE WILL NOT BE FOOLED BY ANOTHER ROUND OF CEASEFIRE AND THE STRUGGLE GOES ON UNTIL TAMIL NATIONAL QUESTION IS SETTLED ONCE AND FOR ALL.*

## TELO NEWS CONTENTS

1. News Bulletin.

3. LEADER's PRESS STATEMENT.

4. DICTUM FOR DICTATORS

5. தேசிய விடுதலைப் போராட்டங்கள்.

7. குறிஞ்சாத்தீவு தாக்குதல்.

9. வீரகேசரி (8-2-86) யில் லலித்தின் ஜகம். (பேட்டி)

10. பேச்சுவார்த்தையும், போராட்டமும் ..

13. ஜே.ஆரின் பேட்டி.
"லண்டன் ரைம்ஸ்" இற்கு பேட்

# News Bulletin

01-02-86 தொடக்கம் 28-02-86வரை

01-02-86 இல்,

கிளிநொச்சியில் காலை 7 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை சிறீ லங்கா அரசு ஊரடங்குச்சட்டத்தை அமுல்படுத்தியது, இத்தினத்தில் 29 தமிழர்கள் சிங்கள இராணுவத்தால் இப்பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

02-02-86 இல்

கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சிக்குச் சென்றுகொண்டிருந்த மினி வான் ஒன்று அரச கூலிப்படைகளால் மாங்குளத்திற்குத் திசை திருப்பப்பட்டு அதில் இருந்த 23அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

03-02-86இல்

முல்லைத்தீவில் அரசகூலிப்படைகள் 'ரெலோ' போராளிகளினால் சுற்றிவளைக்கப்பட்டு அவர்களுக்கான உணவு, மற்றும் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச்செல்லும் சகல வழிகளும் துண்டிக்கப்பட்டன.

04-02-86 இல்

இன்று சிறீ லங்கா இனவாத அரசின் குடியரசுக் கொண்டாட்டங்கள் தமிழீழமெங்கும் பகிஸ்கரிப்புக்கு உட்பட்டன. இதே வேளை கற்றனில் தமிழர்களுக்குச்சொந்தமான சில கடைகள் காடையர்களால் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன.

05-02-86 இல்

சிறீ லங்காவின் 'மகர' எம்பி கமலவர்ண ஜெயகொடி கனேமுல்ல எனும் இடத்தில் வைத்துச் சிங்கள இராணுவத்தினால் தவறுதலாகச்சுட்டுக் காயப்படுத்தப்பட்டார். இதே வேளை வடபகுதியின் பருத்தித்துறையில் 7 தமிழர்கள் சிங்கள இராவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

06-02-86 இல்

முன்னாள் பட்டிருப்பு எம்பியும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினருமாகிய பி. கணேசலிங்கம் இன்று இந்தியாவில் காலமானார். இறுதிக்கிரியைகள் பட்டிருப்பில் நடைபெற்றன

07-02-86 இல்

கிழக்கில் வந்தாறுமூலையிலும், மூதூரிலும் இரண்டுகெலி கொப்ரர்கள் விடுதலைப்போராளிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டன. மலைநாட்டுப்பகுதியில் கற்றனில் உள்ள இ.தொ.கா. காரியாலயம் காடையரால் தீக்கிரையாக்கப்பட்டது.

08-02-86 இல்

பருத்தித்துறையில் சிங்கள இராணுவத்தினர் ரோந்து சென்ற சமயம் விடுதலைப் போராளிகளின் தாக்குதலால் பலர் காயமடைந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

09-02-86 இல்

மட்டக்களப்பில் கொள்ளை ஒன்று பற்றி விசாரணைக்குச் சென்ற ரெலோ உறுப்பினர் சிலர் ஈரோஸ் இயக்கத்தினரால்கைது செய்யப்பட்டு இன்று பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

10-02-86 இல்

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை சம்பந்தமாகத் தெளிவான கொள்கைகளை சிறீ லங்கா அரசு முன்வைத்தாலன்றிப் பேச்சுவார்த்தை தொடர்பாக இந்திய அரசு எந்தவித முயற்சியையும் மேற்கொள்ளப்போவதில்லை என ராஜீவ் காந்தி மாலைதீவில் பத்திரிகைப் பேட்டியொன்றில் குறிப்பிட்டார்.

11-02-86 இல்

இந்தியாவில் உள்ள சிறீ லங்காவின் தூதவர் பேனட் திலகரட்ன 'தமிழர் பிரச்சிக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியும்' என இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரமேஸ் பண்டாரியிடம் கூறியுள்ளார்.

12-02-86இல்

மூதூரில் 18 இளம் பெண்கள் சிங்கள இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டனர். மட்டக்களப்பிலும் 14 பெண்கள் கைது செய்யப்பட்டனர். இதே வேளை மலையகத்தில் வடக்கு, கிழக்குபோல் பயங்கரவாதம் பரவி விட்டதாகவும் இதனை அரசு தொண்டமானைச் 'செல்லப்பிள்ளை' ஆக்கியதன்மூலம் ஊக்கப்படுத்தி வருகிறது எனவும் முன்னாள் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயகா குற்றம் சாட்டினார்.

13-02-86 இல்

பாலைதீவில் மீன் பிடிக்கச்சென்ற 6 பேர் அரச கூலிப்படைகளால் சுடப்பட்டனர்.

'சிறுபான்மையினரின் பிரச்சினைகளை, அதாவது தமிழரின் பிரச்சினைகளை முன்வைத்து அரசியல் இலாபம் தேடக்கூடாது' என அநுரா பண்டாரநாயக்காவை முன்னாள் அமைச்சர் பதியுதீன் முகமத் இன்று அறிக்கை ஒன்றின் மூலம் எச்சரித்தார்.

14-02-86 இல்

சிறுபான்மையினரின் பிரச்சினைகளை வைத்து அரசியல் இலாபம் பெறவேண்டாமென, முன்னாள் அமைச்சர் பதியுதீன் முகமத் அவர்கள் எச்சரித்ததைத் தொடர்ந்து 'முஸ்லீம்களுக்குச் சிறீ லங்கா இல்லாவிட்டால் அராபிய நாடுகளில் போய் குடியேறலாம்' என அநுரா பண்டாரநாயகா கூறியுள்ளார். இதே வேளை முஸ்லீம்களும் ஜிகாவத் படை எனப்படும் குண்டர் படையிற் சேர்ந்துவருவதாக லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

15-02-86 இல்

யாழ் வங்கியில் ஓய்வூதியம் பெறச்சென்ற 3 முதியவர்கள் சிங்களக் கூலிப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தமிழர் பிரச்சினைகளை இராணுவத்தீர்வின் மூலம் தீர்க்க சிறீ லங்கா அரசு முயற்சிப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சர் திருபகத் அவர்கள் குற்றம்சாட்டி அமெரிக்க ஜனாதிபதி றேகனிடம் இந்தியாவின் சமாதான முயற்சிகளையும் விளக்கியுள்ளார்.

16-02-86 இல்

ரெலோவின் அதிரடித் தாக்குதலினால் 52 பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இச் சம்பவம் ஆனையிறவுக்கு அருகாமையில் உள்ள 'குறிஞ்சாத்தீவு' என்னும் இடத்தில் நடைபெற்றது. இச் சம்பவத்தின் பின்னர் செல்வம் எனப்படும் (செந்தில்) ரெலோ வீரர் வீர மரணம் அடைந்தார். இதே வேளை யாழ் நகரப்பகுதிகளில் கொள்ளைச்சம்பவங்களில் ஈடுபட்ட இரு கொள்ளைக் கோஷ்டியினரை ரெலோ இராணுவம் கைது செய்து பொருட்களையும் கைப்பற்றிப் பொதுமக்களுக்குப் பகிரங்கப் படுத்தினர்.

17-02-86 இல்

குறிஞ்சாத்தீவுத் தாக்குதலைத் தொடர்ந்து அரசகூலிப்படைகள் நவீன யுத்தக்கருவிகள் மூலம் குறிஞ்சாத்தீவினைச் சூழவுள்ள பகுதிகளில் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. இதில் 2 கெலி கொப்ரர்கள் ஒரு யுத்தவிமானம் ஆகியவை பாவிக்கப்பட்டன.

ஈரோஸ் இயக்கத்தினால் உளவாளி என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பிரிட்டிஸ் பெண்மணி இன்று விடுவிக்கப்பட்டார்.

18-02-86 இல்

மட்டக்கிளப்பில் புதிய சிங்கள இராணுவ முகாம் ஒன்று திறக்கப்பட்டது.

19-02-86 இல்

திருகோணமலையில் எல்லேக்கந்தளாய் எனும் இடத்தில் விடுதலைப்போராளிகள் வைத்த நிலக்கண்ணி வெடிக்கு 3 சிங்களக் கூலிப்படையினர் உட்பட 37 சிங்களக் காடையர்கள் பலியானார்கள். 36 பேர் படுகாயம் அடைந்தார்கள்.

இதே வேளை வடபகுதிப் பிரதேசங்களாகிய சுதுமலை, தாவடி, இணுவில், கோண்டாவில் கொக்குவில், ஆகிய இடங்களில் யுத்த விமானங்களில் இருந்து குண்டுவீச்சுத்தாக்குதல்கள் இடம்பெற்றதில் நால்வர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயம் அடைந்தனர். பல வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன.

20-02-86 இல்

கொழும்பில் சுமார் 90 க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் சிங்களக் கூலிப்படையினரால் இன்று கைது செய்யப்பட்டனர். இதே வேளை மட்டக்கிளப்பு திருக்கோவில் பகுதியில் 103 தமிழ் விவசாயிகள் வரிசையில் நிறுத்தப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், இவர்களது சடலங்கள் பெற்றோல் ஊற்றித் தீயிடப்பட்டன. இதே தினம் வட பகுதியில் இரண்டு பெரிய இயக்கங்கள் தம்மிடையே மோதிக் கொண்டுள்ளன. (ரெலோ அல்ல)

22-02-86 இல்

இன்று ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் தமிழர் பிரச்சினை பற்றி நடந்த விவாத அரங்கில் திரு. சிவசிதம்பரம், ஏ. ஜே. வில்சன் நீலன் திருச்செல்வம், பிரம்மன் வீரக்கோன் ஆகியோருடன் வேறும் இருவர் கலந்து கொண்டனர்.

27-02-86 இல்

இன்றும் யுத்தவிமானங்களினால் சுதுமலை, வேலணை ஆகிய இடங்களை அரச படைகள் தாக்கியுள்ளன. சுதுமலையில் குறிப்பிட்ட ஒரு இயக்கத்தின் முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மூவர் இறந்தனர்.

28-02-86 இல்

தமிழர் பிரச்சினை பற்றித் திரு. சிவசிதம்பரம் அவர்கள் பேசிய பேச்சு இன்று பி. பி. சி. வானொலியில் ஒலிபரப்பாகியது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
Thamil Eelam Liberation Organization
தலைமையகம் : தமிழ் ஈழம் HEAD QUARTERS : THAMIL EELAM

TELO

தேதி 3.2.86......1986

News Editor,

Madras.

WE have been informed by our intelligence network that a diabolic plan is afoot in the Sri Lankan Government to unleash a large-scale massacre in the northern province of Jaffna and its surroundungs so as to kill atleast 10,000 tamil-civilians by this month-end. Our information is that a big offensive against the Tamils is to be launched in this area very soon.

Already, troops have been moved to Jaffna from different places down south like Anuradhapura and Vavuniya. Curfew is on in some Tamil areas such as Killi-nochi and the tea plantations.

In these circumstances, we want to assure the Tamil people that the liberation fighters have gathered their full strength and are planning for eff-ective counter-offensives. We are in full alertness and preparedness; the hits now planned by us against the government troops are going to be so fierce the like of which the enemy has not witnessed untill now.

We want help from all civilised people across the world to fight this genocide of the Tamils, whose only fault in the rabid eyes of the Sinhala Gover-nment is that we ask for basic human right of self-determination.

President Jayewardene of Sri Lanka has said recently, that he has now weapons and men not only to fight us, the Tamil freedom fighter, but also any other country that might oppose his annhilation methods. We want the Government of India to take note of these senile outbursts of a sick man. His words also show he has no desire for a political solution to our problem but is preparing for a military action.

We want to make it clear that we are also in full preparedness and shall answer his war-call to the very last drop of the Tamil blood and in this fight for justice, we want the support of ~~the Tamil blood and in~~ all those who cherish freedom.

We have stated this, our final note of warning; let there be no indif-ference anymore.

தலைவர்

(SRISABARATHINAM)
Leader-"TELO"....

# DICTUM FOR DICTATORS

Dethroning dictum for all dictators is "DISGRACE AND DEATH".

February 1986 saw two of the most prominent dictators Duvalier of Haiti and Marcos of Phillipines following their predecessors, going into oblivion in disgrace but with enough pot of gold to have fearful but a life of luxury while the people they claim to have served take up the challenge of rebuilding their shattered nation.

The messy and power driven international politics is such that the world and particularly those suffering masses will never see the back of all dictators. New baby Docs shall emerge or inherit nations that seek or lack leadership.

While the naked dictators of Duvalier kind perish under the inevitable pressure - POWER OF THE PEOPLE - there is another kind of dictators - the veiled democratic dictators like J.R.Jayawardene, Botha and Co remain entrenched in their respective power bases, while crisis encircle them slowly but surely.

While claiming to be guardians of democracy these elected dictators have so far violated all known democratic principles

So far they have managed to remain in power by sheer force while using democratic institutions to cover and camouflage their dictatorial rule.

The money lenders and aid providers who prop these regimes for their own ends remain loyal to these regimes so long as the democratic impression they give to the world remain intact.

But it has been repeatedly proven in recent times that the very forces who prop up these undemocratic and dictatorial regimes also withdraw their support at crucial hour, leaving the fate of these dictators at the mercy of the people.

*Contd.......*

## தேசிய விடுதலைப் போராட்டங்கள் ...

உலகில் இன்று உக்கிரமடைந்துவரும் போராட்டங்கள் மனித சமுதாயத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துவருகின்றன. இவ் அச்சுறுத்தல்கள் வெவ்வேறு வடிவங்களில் அமைந்துவருகின்றன. இவற்றின் பரிமாணங்கள் வெவ்வேறு அளவினதாயினும் இயல்பில் ஓர் பொது அம்சத்தை தொட்டு நிற்கின்றன. அவை சகல ஒடுக்கு முறைகளிலிருந்தும் விடுதலையே. இன்றைய பொருளாயத உலகில் உற்பத்தி உறவுகளுக்கிடையிலான முரண்பாடுகளின் வெளிப்பாடுகளே இத்தகைய நிலமைகளுக்கு காரணமாக அமைகின்றன.

உற்பத்தி சாதனங்களை உடமைகொள்வோர் சமுதாயத்தின் பலவீனங்களின் மேல் தமது ஆதிக்கத்தைப் பெருக்குகின்றனர். குறிப்பாக மக்கள் மத்தியிலிருக்கும் மதம் மொழி மற்றும் நிறவேறுபாடுகள் போன்ற இன்னோரன்ன பலவீனங்களின் மீது தமது சுரண்டலை மேற்கொள்வதற்கும், அடக்குமுறையை மேற்கொள்வதற்கும் உரிய காரணங்களாக அமைகின்றன. ஒரு மதத்தின் மீதுள்ள நம்பிக்கையை பெரிதுபடுத்துவதன் மூலம் இதர மதங்களை புறக்கணிக்கத் தூண்டுதல், ஒரு மொழி மீதுள்ள பற்றினை வெளிப்படுத்துவதன் மூலம் இதர மொழிகள் மீது அவநம்பிக்கையை வளர்த்தல், மற்றும் நிறவேறுபாடுகள், நிலபிரபுத்தவத்தின் எச்ச சொச்சங்களான சாதி, பிரதேசவாதம் போன்றவற்றை ஊக்குவித்தல் போன்ற சமுதாய பலவீனங்கள் ஆதிக்கத்தை நியாயப்படுத்த உதவுகின்றன. இந்நிலமைகள் சம்பந்தப்பட்ட சக்திகளிடம் இருவேறு வடிவங்களில் தேசியவாதத்தை வளர்க்கின்றன.

சமுதாய பிற்போக்கு அம்சங்களை நியாயப்படுத்துவதன் மூலம் பூர்சுவா தேசியவாதம் வளர்கிறது. இதேவேளை உள்நாட்டு ஒடுக்குமுறையின் தீவிர நிலமைகளும், சர்வதேச ஒடுக்குமுறையின் எழுச்சி நிலமைகளும் தவிர்க்கமுடியாதவாறு முற்போக்கு தேசியவாதத்தை முன்வைக்கத்தூண்டுகின்றன. ஆரம்பத்தில் இப்போராட்டங்கள் நியாயமான அம்சங்களை வெளிப்படுத்தினும் ஓர் இறுக்கமான நிர்ணயமான போராட்ட காலத்தில் அது தவிர்க்கமுடியாமல் தனது நலனை வெளிப்படுத்துகிறது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இத்தகைய நடவடிக்கைகளின் வெளிப்பாடுகள் தலாம்பரமாக தெரிகின்றன. சுதந்திரம், ஜனநாயகம், மனிதஉரிமை போன்ற கோஷங்கள் அடிக்கடி எழுப்பப்படுகின்றன. கட்டுப்பாடற்ற பொருளாதாரக் கோட்பாடு சுதந்திர பொருளாதார அமைப்பு என்ற வார்த்தை அலங்காரங்களின் மூலம் சமூகத்தின் பொருளாதார ரீதியிலான பலவீனமான மக்கள் பகுதியினரிடையே சுரண்டல் ஆதிக்கம் நிலைநிறுத்தப்படுகிறது. உற்பத்தி சாதனங்களின் உடமையாளர்கள் உற்பத்தி சக்திகளின்மேல் சுதந்திரம், ஜனநாயகம், மற்றும் பொருளாதார உதவி என்ற போர்வையில் கூலி உழைப்பை சுரண்ட வழிசமைக்கப்படுகிறது.

இதேபோல சமுதாயத்தின் பெரும்பான்மை மக்களின் மதம், மொழி என்பவற்றின் பலவீனங்கள் செயற்கைரீதியாக ஊக்குவிக்கப்பட்டு அதனை மூலதனமாக்கி தேர்தல்கள் நிகழ்த்துவதும், தேர்தலின் பின் பொருளாதார அடிப்படையில் வியாக்கியானங்கள் கொடுக்கப்படுவதும் நவீனகால ஜனநாயக விளக்கங்களாகி வருகின்றன. சுருங்கச் சொன்னால் அடிக்கடி தேர்தல்களை வைப்பதுதான் ஜனநாயகம் என்ற அளவுக்கு ஜனநாயகம் கொச்சைப்படுத்தப்படுகிறது.

இத்தகைய நிகழ்வுகளின் அடிப்படையில் தேசிய விடுதலைப்போராட்டத்தின் உண்மையான இயங்கியல் அம்சங்களை தெரிவு செய்வதும், அதன் அடிப்படையில் போராட்ட யுக்திகளை வகுத்துக்கொள்வதும் அவசியமாகிறது.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் தன்மையை எவ்வாறு கண்டுகொள்வது? வரலாற்று நிகழ்வுகளின் போக்கினை அடிப்படையாக வைத்தே இதனை தீர்மானிக்க முடியும். தேசியவிடுதலைப் போராட்டத்தை எடுத்துச் செல்லும் சக்திகளின்

தன்மையை கண்டுகொள்வதன் மூலம் போராட்டத்தின் தன்மையை கண்டுகொள்ள கொள்ள முடியும்.

இதன் முற்போக்குத் தன்மையை எவ்வாறு கண்டுகொள்ள முடியும்?

சமூகத்தின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டவர்களின்அரசியல், சமூக, பொருளாதார விழிப்புணர்வு, அதனால் ஏற்படும் அரசியல் தலைமை, அதன் போராட்ட இயல்பு என்பவற்றின் மூலமும், சமூகத்தின் பொருளாதார இயக்கு சக்திகளின் அணிதிரள்வு, ஐக்கியம் என்பவற்றிலும், பொது எதிரியை தெரிவு செய்து கொள்வதும், அதன் அடிப்டையில் பொது எதிரிக்கெதிரான முன்னணியின் அரசியல் ரீதியான இணக்கப்போக்கு என்பன போன்றவற்றில் ஏற்படும் தலைமையிலேயே அதன் தன்மையை இனம் காண முடியும்.

பிற்போக்கு வடிவம் எவ்வாறிருக்கும்?

சமுதாயத்தின் பலவீனமான பகுதிகளான நிறம், மதம், மொழி மற்றும் பல இன்னோரன்ன பகுதிகளில் மேலதிக ஊக்கம் காட்டுதல்,
ஆடம்பர வாழ்வுக்கான செயற்கையான வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் அடிப்படை உரிமைகளுக்கான போராட்டத்தின் கூர்மையை மழுங்கடித்தல்,
சமூகத்தின் விடுதலைக்கான போராட்டங்களை மேலும், மேலும் பரம்பரம் நம்பிக்கை இழக்கச்செய்தல்,
இராணுவம் மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளின் மீது மேலும் மேலும் அதிகாரத்தினை குவித்தல்,
இத்தகைய செயற்பாடுகள் சமுதாயத்தின் பிற்பட்ட பகுதியினரிடையே ஓர் பயங்கர நிலைமையை உருவாக்கும்.

வரலாற்று ரீதியான இந் நிகழ்வுகளின் அடிப்படையிலேயே தமிழ் மக்களின் போராட்ட நிலைமைகள் அவதானிக்கப்படவேண்டும்.

தொடர்ந்து வரும் கட்டுரைகள் சர்வதேச நிலைமைகளில் தமிழ்பேசும் மக்களின் போராட்டம் பெற்றுவரும் முற்போக்கு அம்சங்களை காணலாம்.

(விமர்சனங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.)

---

Contd from. 4...

DICTUM FOR DICTATORS

Ultimately no forces could keep the power of the people emerging victorious and in the process also destroying floundered democratic institutions and the vested interests within the politi of the nations who seek change for progress.

So, dictators of all kind! Wake up to your eventual demise.

Oppressed people everywhere Take hold of the power that lies in your hands and march forward towards VICTORY.

# குறிஞ்சாத்தீவில் 52 இராணுவவீரர் பலி!

## 'டெலோ' இயக்கம் உரிமைகோருகிறது

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் TELO

16-02-86 இன்று அதிகாலை நாலு மணியளவில் ஆனையிறவு சிங்கள இராணுவ முகாமுக்கு அருகாமையில் உள்ள 'குறிஞ்சாத்தீவு' என்னும் இடத்தில் 'ரெலோ' அதிரடிப்படை வீரர்களுக்கும், சிங்கள இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் சிங்கள இராணுவத்தினர் 52 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் நிறவெறி அரசான தென்னாபிரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கவச வாகனங்களில் 3 வாகனங்கள் முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளன. மேலும் இச்சம்பவம் பற்றி விபரிக்கப்படுவதாவது,

16-02-86 அதிகாலை 3 மணியளவில் 'ரெலோ' வீரர்களில் ஒருவர் குடிமக்களில் ஒருவர் போல் மாறுவேடமிட்டு ஆனையிறவு சிங்கள இராணுவ முகாமுக்குச்சென்று குறிப்பிட்ட குறிஞ்சாத்தீவில் விடுதலைப் போராளிகள் பலர் முகாமிட்டு இருப்பதாகவும், தான் அவ்விடங்களைக் காட்டுவதாகவும், பொய்த்தகவல் ஒன்றைக் கொடுத்துள்ளார் (உண்மையில் ரெலோ வின் முகாம் எதுவும் குறிஞ்சாத்தீவில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது) அதன் பின்னர் பாகிஸ்தானில் விசேடமாகப் பயிற்சி பெற்ற சிங்கள இராணுவத்தினர் குறிப்பிட்ட ரெலோ வீரரையும் அழைத்துக்கொண்டு குறிஞ்சாத்தீவுக்குப் பலி வந்தார்கள்.

ஏற்கனவே எதிர்பார்த்திருந்த ரெலோ அதிரடிப்படை வீரர்கள் சிங்கள இராணுவத்தினர்மீது தாக்குதலைத் தொடுத்தார்கள். இத்தாக்குதலில் 3 லெப்டினன்கள் 3 சார்ஜன்மார் உட்பட 52சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். இத்தாக்குதலைத் தொடர்ந்து வழமைபோல் பொதுமக்கள் மீது ஏற்படும் தாக்குதல்களைச் சமாளிக்க இதர ரெலோ போராளிகள் தயாராக இருந்தபோது குண்டு வீச்சு விமானங்கள், கெலி கொப்ரர்கள் போன்றவற்றில் வந்த சிங்கள இராணுவத்தினர் சரமாரியாகக் குண்டுகளைப்போட்டு ஆகாயத்தாக்குதலை மேற்கொண்டனர். இதன்காரணமாக ரெலோ வீரராகிய செந்தில் (செல்வா) என்பவருடன் பொதுமக்களில் 4பேரும் கொல்லப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் பற்றிய எச்சரிக்கையை கடந்த10-02-86இல் அமைச்சர் லலித் அத்துலத்முதலி விடுத்திருந்ததும் தெரிந்ததே.

பொதுவாக ரெலோ வீரர்கள் தாக்குதல்களில் ஈடுபட்டால் பின்னர் பொதுமக்களைப் பாதுகாக்கும் கடமைகளிலும் ஈடுபடுவது வழக்கம். இதை சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல், முருகண்டி ரயில்வண்டித்தாக்குதல்கள் நிரூபித்திருக்கின்றன. குறிஞ்சாத்தீவுத் தாக்குதலின் பின்னரும் பொதுமக்களைப் பாதுகாக்கும் கடமையை ரெலோ வீரர்கள் நிறைவேற்றத்தவறவில்லை. தொடர்ந்து தாக்குதல்களை நடத்த ரெலோ தீர்மானித்திருக்கின்றது. அமைச்சர் 'லலித்' தின் பேட்டியும் ஊர்ஜிதப்படுத்துவதாக உள்ளது. (இணைப்பு 8-2-86 வீரகேசரி பிரதி)

தமிழீழ விடுதலை இயக்கம். லண்டன் கிளை.



கலாநிதி டபிள்யூ. கே. ஜினதாஸ,
161, ஒல்கோட் மாவத்தை, கொழும்பு-11.
தொலைபேசி: 25095.

VIRAKESARI
வீரகேசரி
THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA

மலர் 56 இதழ்: 160 | கொழும்புகுரோதன் ஆண்டு தை மீ 26உ சனிக்கிழமை (8—2—1986) ஹிஜ்ரி 1406 ஐ.அவ்வல் பிறை 28 P.O. Box 160 Phone: 20881 Gra

# பேச்சுவார்த்தை முயற்சியை அரசு இன்னமும் கைவிட்டுவிடவில்லை

## 'டெலோ' பாரிய தாக்குதலுக்கு தயாராகிறது

## தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித்கூறுகிறார்

(அன்டன் எட்வேர்ட்)

"இனப்பிரச்சினைக்கு அரசியல் நிர்வொன்றைக் காணவே அரசாங்கம் விரும்புகிறது. இது தொடர்பான பேச்சுவார்த்தை முயற்சிகளை அரசாங்கம் கைவிடவில்லை. —தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்" என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்று நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் வைத்து தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை. அரசாங்கம் இதில் உறுதியாகவே உள்ளது என்றும் அமைச்சர் சொன்னார்.

[illegible]

திரு. லலித் அத்துலத் முதலி நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

அதன் விபரம் வருமாறு:

[illegible]

...வாதிகள் அதற்கு இடமளிக்க மாட்டார்கள்.

கேள்வி: ஆறுவது திருத்தத்தை (பிரிவினை சட்டம்) நீக்கிவைத்தால் என்ன?

பதில்: சமாதான தீர்வு தோன்றும் நிலை என்றால், சமாதானத்துக்கு அந்த நடவடிக்கை அவசியமென்றால் சிந்திக்கலாம்.

### சிங்கராயருக்கு மன்னிப்பு

கேள்வி: திருமதி நிர்மலா பண்டாரநாயக்காவுக்கு மன்னிப்பு அளித்தது போல் வண. பிதா சிங்கராயரின் விடயத்திலும் சிந்தித்தால் என்ன?

பதில்: வழக்கு முடிவுற்றும் சிந்திக்கலாம்.

கேள்வி: மட்டக்களப்பில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக...?

பதில்: [illegible] அங்கு பிரச்சினை உருவெடுத்தது. இடையில் சிலர் புகுந்து செயற்பட்டுள்ளதாக தெரிகிறது. மறைந்த கரங்கள் சில சம்பவங்களுக்கு பின்னால் இருப்பது போல் தெரிகிறது. இது தொடர்பான விசாரணை நடைபெறுகிறது. சிங்களவர்கள் மட்டுமன்றி தமிழ் மக்களும் அகதிகளாகியுள்ளனர்.

கேள்வி: கிளிநொச்சியில் நடந்த சம்பவங்கள் என்ன?

பதில்: பாதுகாப்பு பிரிவினரின் வாகனம் சேற்றில் புதைந்த போது பயங்கரவாதிகள் தாக்க ஆரம்பித்தனர். இதில் நான்கு இராணுவ வீரர்கள் காயமடைந்...

(5ஆம் பக்கம் பார்க்க)

**அமைச்சர் லலித்தின் தீர்க்கதரிசனம் பலித்துள்ளது.**

### பேச்சு வார்த்தை..

(முன்பக்கத் தொடர்ச்சி)

...தனர். 45 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். 29 இராணுவ வீரர்கள் இறந்ததாகவும் 100 அப்பாவிகள் மாண்டதாகவும் தீவிரவாதிகள் பிரசாரம் மேற்கொண்டனர். இதில் உண்மை இல்லை. போராடி வெற்றி பெறமுடியாது என்று கண்டவுடன் பிரசார வழிகளில் வெற்றிபெற முற்பட்டுள்ளனர்.

### தாக்குதலுக்கு தயார்

கேள்வி: தீவிரவாத இயக்கங்கள் தாக்குதலுக்கு தயாராகின்றனவா?

பதில்: 'டெலோ' தாக்குதலுக்கு தயாராகி வருவதாக தகவல் கிடைத்துள்ளது. ஆனால் பாதுகாப்பு படையின் பலம் நாளுக்கு நாள் அதிகரித்திருக்கிறது. அவர்கள் மோதி வெற்றி காண முடியாது. நவீன ஆயுதங்களை நாம் வாங்கியிருக்கிறோம்.

கேள்வி: மஹர எம்.பி. யின் மீது இராணுவத்தினர் கட்டிருக்கின்றனரே?

பதில்: பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் போது இத்தகைய சம்பவங்கள் தவிர்க்க முடியாதவை.




TELO'S International Information Service (LONDON) 470.5048

*MAL ARCHI*
143, Wakefield street
EastHam London .E6
Phone ...01-4750403

## பேச்சுவார்த்தையும் போராட்டமும்.

சமீபகாலமாக தமிழ்பேசும் மக்களின் பிரச்சனை பேச்சுவார்த்தையின் பக்கம் சரிந்து வருகிறது. அதேவேளை சிறீலங்கா இனவெறி அரசின் மனிதவெறியும் தொடர்கிறது. இந்நிலையில் இந்திய அரசும் ஏனைய சில நாடுகளும் பேச்சுவார்த்தை பற்றிய ஆர்வத்தை வெளியிட்டு வருகின்றன. அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை, இராணுவத்தீர்வு என கன்னை சேர்ந்து வருகின்றனர். இந்நிலையில் விடுதலை இயக்கங்கள் இவைபற்றி அதிக ஆர்வம் கொண்டதாக தெரியவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணி மட்டும் பேச்சுவார்த்தை பற்றிய தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது. இந்நிலையில் இப்போராட்டத்தின் அடுத்த அம்சம் அதாவது இம்மாதிரியான சிக்கலான காலகட்டத்தில் இயக்கங்கள் இவற்றினை எவ்வாறு சமாளிக்கப்போகின்றன? என்பதே பலரின் இன்றைய கேள்வியாக உள்ளது.

"திம்பு"வில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை நிச்சயம் தோல்வியைத்தரும் என இயக்கங்கள் பலமுறை இடித்துக்கூறியும் இந்திய அரசு பேச்சுவார்த்தையில் அதீத நம்பிக்கை கொண்டு சிறீலங்கா இனவெறி ஜனாதிபதியின் கபடநோக்கத்தினை அறியாமல் பேச்சுவார்த்தையை நடத்தியது. இயக்கங்களும் தமது சமாதான வேட்கையை உலகுக்கு வெளிப்படுத்தும் நோக்கில் மிகவும் தயக்கத்துடன் பங்குபற்றின. குறிப்பாக இப் பேச்சுவார்த்தையின் மூலம்விடுதலை இயக்கங்களே தமிழ்பேசும் மக்களின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் என்பதனை சிறீலங்கா அரசின் மூலம் அங்கீகரிக்கச்செய்தனர். இதன்காரணமாக " பயங்கரவாதக்குழுக்கள் " என்ற நிலைமாறி" சட்டரீதியான பிரதிநிதிகள் " என்ற சர்வதேச அங்கீகாரத்தைப்பெற்றனர்.

சிறீலங்கா அரசினைப் பொறுத்தவரையிலும் இப் பேச்சுவார்த்தை வெற்றியை அளித்துள்ளது. பேச்சுவார்த்தை நடைபெற்ற மூன்றுமாத காலத்தில் ஆயிரக்கணக்கான அரச கூலிப்படைகள் ( இராணுவம் ) தீவிர பயிற்சிகளை பாகிஸ்தானில் பெற்றுக் கொள்ள உதவியது. மொத்தத்தில் இப் பேச்சுவார்த்தை இந்திய ராஜதந்திரத்திற்கு ஏற்பட்ட முதல் தோல்வியாகவே முடிந்தது.

இருப்பினும் இந்திய ராஜதந்திர முயற்சிகள் பல திடீர் விளைவுகளை அளித்தது குறிப்பிடத்தக்கது. அதாவது முன்னாள் பிரதமர் திருமதி. சிறிமா பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமை வழங்கப்பட்டமை, அதனைத்தொடர்ந்து மலையக மக்களின் நாடற்றோர் பிரச்சனைக்கு முடிவுகாண ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை ஆகியனவாகும்.

மலையக மக்களின் பிரச்சனை 18 மாதகாலத்தில் தீர்க்கப்படும் என அரசாங்கம் முடிவுசெய்ததைத்தொடர்ந்து பல சந்தேகங்கள் எழும்பியுள்ளன. நாடற்றோர் பிரச்சனை தீர்ப்பதற்கு 18 மாதகால அவகாசம் பெறப்பட்டதற்கும், தமிழ் பேசும் மக்கள் மீது இராணுவத்தீர்வினை பிரயோகிப்பதற்கும் சம்பந்தம் உண்டா? என்பதுதான்.

சமீபகாலமாக மலையகமக்கள் வடக்கு, கிழக்கு பகுதி மக்களின் போராட்டத்திற்கு மிகவும் அனுசரணையாக இருப்பதனால் அப்போராட்டம் மலையகப்பகுதிகளுக்கும் பரவிவிட்டால் மொத்தப் பொருளாதாரம் சீர்குலைந்து அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடும் என்ற பயப்பீதியே இம்முடிவை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தை தள்ளியிருக்கிறது. அரசாங்கமும் கபட நோக்கில் தான் இத்திடீர் முடிவை எடுத்திருக்கிறது.

18 மாதங்களில் தமிழ்பேசும் மக்களின் போராட்டத்தினை இராணுவ ரீதியில் நசுக்கியதும், பிரஜா உரிமை வாக்குறுதியை வழக்கம் போல காற்றில் பறக்கவிடுவார்கள். இதனை நிறைவேற்றிக்கொள்வதற்கு வசதியாக சிறிமா பண்டார நாயகாவிற்கு உயிர்ப்பிச்சையளித்து அவரை மலையக மக்களுக்கு எதிராக பிரச்சாரம் செய்ய வழி செய்துள்ளார். அவரது ராணுவ நோக்கம் நிறைவேறியதும் சிறிமா அம்மையா.

னின் கொடுமையால் மலையக மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை தன்னுல் நிறைவேற்ற முடியவில்லை என பண்டாரநாயகா கையை விரித்தது போல் விரிப்பார். அப்போது தான் திரு. தொண்டமான் அவர்களும் தனது பால்ய நண்பரின் விஸ்வரூபத்தைக்காண்பார்.

அவரது பால்ய நண்பர் தமக்கு பெரிய வரம் தந்தனர் என்ற இறுமாப்பு "தொண்டா" அவர்களுக்கு இருக்கலாம். மக்களின் உரிமையை பறித்தவர்களிடமிருந்து மீண்டும் பெற்றதை ஏதோ கொடையென எண்ணி தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை தனது குறுகிய அரசியல் நலன்களுக்காக தூக்கியெறிந்து அரசில் தொடர்ந்தும் ஒட்டியிருப்பதற்கான சரியான பதிலை மக்கள் நிச்சயம் அளிக்கத்தான் போகிறார்கள்.

தொண்டமானின் எண்ணப்படியும், முடிவின்படியும் தொடர்ந்து மலையக மக்களை இருட்டறையில் வைத்திருக்க முடியாது. அவர்கள் மொத்த தமிழ் பேசும் மக்களின் ஒருபகுதியினர்தான். இன்று வடக்கு, கிழக்கு மக்களாக இருக்கலாம். நாளை அவர்களும் இதே ஒடுக்கு முறைக்கு இலக்காவார்கள். ஏன்? தற்போது சிறிது சிறிதாகவே அவர்கள் ஒடுக்கப்பட்டு வருகிறார்கள். இதனை "தொண்டா" அவர்கள் உணர தற்போதைக்கு வாய்ப்பில்லைதான். ஏனெனில் அவரைப்பொறுத்தவரையில் மந்திரிப் பதவி பெரியது. சிங்கள இனவெறியர்களில் பலர் அவரை "ஆட்டு மந்திரி" என்றும் "மாட்டு மந்திரி" என்றும் அழைப்பது அவருக்கு கேட்க சந்தர்ப்பமில்லைதான்.

இருப்பினும் மலையகத்தில் அவரின் துரோகத்தனத்தையும் மீறி சம்பவங்கள் நடக்கத்தான் செய்கின்றன. கூலிப்படைகளை (ராணுவத்தை) தமது அனுமதியின்றி தமது பிரதேசத்திற்குள் நுழையக்கூடாது என தொழிலாளிகள் எச்சரித்திருக்கிறார்கள். தம் மீது தாக்குதல் நடத்த வந்த காடையர்களை துரத்தி, துரத்தி அடித்திருக்கிறார்கள்.

இதே வேளை தொண்டமான் அவர்களின் தொழிற்சங்கக் காரியதரிசியான "ராஜா" அவர்கள் அரசாங்கமே மலையக கலவரங்களுக்கு காரணமென்றும், விடுதலை இயக்கங்கள் என்ற பூச்சாண்டியின் நோக்கத்தை நாம் அறிவோம் என்றும், விசாரணைக் கமிசன் ஒன்றை நியமியுங்கள் எனவும் அரசாங்கத்தை வேண்டியுள்ளார்.

மிகவும் நல்ல ஆரோக்கியமான வளர்ச்சி மலையகங்களில் ஏற்பட்டு வருகிறது. இனிமேலும் அவர்கள் சந்தர்ப்பவாத அரசியல் சகதிக்குள் மாரடிக்க மாட்டார்கள். மலையக மக்களின் உறுதியான போராட்டத்திற்கு விடுதலை இயக்கங்கள் ஆதரவு அளித்து வருவது போராட்டத்தின் உறுதியான அம்சமாகும். இவ் உறவுகள் மிகவும் இறுக்கமான அரசியல் உறவுகளாக பரிணமிக்க வேண்டும்.

பேச்சுவார்த்தை நிலமைகள் பற்றி விடுதலை இயக்கங்கள் கவனம் செலுத்த வேண்டும். இனிவரும் பேச்சுவார்த்தைகள் முன்னைய நிலமைகள் போல் தட்டிக்கழிக்கக் கூடியதாக இருக்க மாட்டாது. எனவே இயக்கங்கள் இப்பேச்சுவார்த்தை பற்றிய சகல அம்சங்களையும் விவாதித்தல் அவசியமாகும். ஈழத்தேசிய விடுதலை முன்னணி இதர இயக்கங்களுடன் இணைந்து முடிவுசெய்தல் மிக அவசியமாகும். தவறினல் "திம்பு" பேச்சுவார்த்தையின் சாதகமான பலன்கள் யாவும் வீணாய்ப்போய்விடும்.

பேச்சுவார்த்தையில் இயக்கங்களின் நிலைப்பாடுபற்றி இந்திய அரசுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்படவேண்டும். அதேபோல இந்திய அரசின் நடவடிக்கைகள் பற்றிய சகல அம்சங்களும் சகல மட்டங்களிலும் விவாதிக்கப்படவேண்டும். இவ்வாறான விவாதங்களால் விரும்பத்தகாத சில நடவடிக்கைகளை தவிர்க்கமுடியும். வெற்றினை அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறோம் என்பதனை ஞாபகப்படுத்தவேண்டியுள்ளது.

அதேவேளை பேச்சுவார்த்தையில் எந்தத்திட்டங்களிலும் தெளிவான ஒருமைப்பாட்டினை சகல தரப்பினரும் உறுதிசெய்து கொள்ளல் அவசியமாகும். தமிழர் விடுதலைக் கூட்டணியினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை சிறீலங்கா அரசினால் நிராகரிக்கப்பட்டாலும் அது மாற்றுவடிவத்தில் சில திட்டங்களை முன்வைக்கலாம். இதனை முன்வைக்க திரு. தொண்டமான் அவர்களை அரச தரப்பார் உபயோகித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தற்போதைய நிலையில் அரசுக்கு உள்ள ஒரே துருப்புச்சீட்டு அவர் ஒருவரேதான். அவரை பாவிப்பதன் மூலம் தமிழரை மேலும் கூறுபோடும் முயற்சியை ஜே. ஆர். முயற்சிக்கலாம். இது அவருக்கு மிகவும் கை வந்த கலை.

இதேவேளை பேச்சுவார்த்தையின் பின் விளைவுகள் பற்றியும் விவாதித்தல் அவசியமாகும். தற்போது இயக்கங்கள் மத்தியிலுள்ள உறவு நிலை மிகவும் கவலைக்குரியதாகும். இந்நிலைமைகளே எதிரியின் சூழ்ச்சிகளுக்கு மிகவும் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்துகிறது.

இவ்வாறான ஒற்றுமையின்மை பேச்சுவார்த்தையின் பின்னரும் நிலவுமாயின் இது அழிவுக்கே வழிவகுக்கும். தமிழ்க்காங்கிரஸ், தமிழரசு என இரண்டாக இருந்து எவ்வாறு எமது மக்களின் போராட்டம் சீர்கெட்டதோ, அதைவிட சீர்கேடாகவே எதிர்வரும் காலங்கள் அமைந்துவிடலாம். அதுமட்டுமல்லாமல் பேச்சுவார்த்தையின் விளைவுகள் ஒவ்வொன்றும் பழையபடியும் பாராளுமன்ற அரசியல் சகதிக்குள் இயக்கங்களையும் மாட்டிவிடலாம். இவ்வாறான நிலைமையைத்தான் ஏகாதிபத்தியங்களும், அதன் அடிவருடிகளும் விரும்புகிறார்கள்.

எனவே தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப்போராட்டம் புதிய திசைவழியில் எடுத்துச்செல்லப்படவேண்டும். இதற்கான அரசியல் குணம்சங்கள் யாவும் உடனடியாக விவாதிக்கப்படவேண்டும்.

தாமதமாகும் ஒவ்வொருவேளையும் எதிரிக்கே சாதகமாகும்.

"எமது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து சிறீலங்கா ராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும். இல்லையேல் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினராகிய நாம் அவர்களை பலாத்காரமாக வெளியேற்றுவோம்."

— தளபதி. குட்டிமணி. அவர்கள் -

" எமது நோக்கு மிக விசாலமானது. ஆபிரிக்காக் கண்டம் என்றால் என்ன, லத்தீன் அமெரிக்க நாடு என்றால் என்ன, எங்கெங்கு ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் அவர்களின் விடுதலைக்காகப் போராடும் நோக்கத்தைக் கொண்டது. அப்படி இருக்கையில் எமது சக தேசத்தவரான மக்களின், குறிப்பாக சிங்கள மக்களின் நலன் அதற்குள் எப்படி அடங்காது போகும்?

— தேசபிதா தங்கத்துரை அவர்கள். —

## அரசபயங்கரவாதம் மேலும் தீவிரப்படுத்தப்படும் ●●●
## ■■ பொதுமக்கள் கொல்லப்படுவது தவிர்க்கமுடியாது ●●●

உலக பிற்போக்கு ஏகாதிபத்தியத்தின் காவல் நாயான அமெரிக்காவின் சிஷ்யப் பிள்ளையான கொலைப்பாதகன் ஜே.ஆர். தனது கொலைகளை எஜமானர்களான பிரிட்டிஸ் ஏகாதிபத்தியத்திடம் நியாயப்படுத்தியிருக்கிறான். ஆகா, நீ எமது செல்லப் பிள்ளையேதான் என எஜமானர்கள் புளகாங்கிதமடைந்திருக்கிறார்கள். தொடர்ந்தும் இப் புனித கைங்கரியத்தை தொடர ஆயுதங்களை வழங்கியிருக்கிறார்கள்.

நிக்கரகுவாவில் அமைந்துள்ள ஜனநாயக அரசுக்கெதிராக " கொன்ரோஸ் " என்ற கூலிப்படையை நிறுவி படுகொலைகளை மேற்கொண்டுவரும் அமெரிக்கா பயங்கரவாதிகளை ஒழிப்பதாகக் கூறி நியாயப்படுத்தி வருகிறது. இதேபோல அங்கோலாவில் அமைந்துள்ள அரசுக்கெதிராக "யுனிட்டா" என்ற கொலைப்படையை நிறுவி பயங்கரவாதத்தை வளர்த்துவருகிறது. தேசபக்த யுத்தங்களை பயங்கரவாதமென விபரித்து அரச பயங்கரவாதத்தை ஆதரித்துவருகிறதுஇப் பிற்போக்கு ஏகாதிபத்தியம். இதன் அடிப்படையில் சமீபத்தில் நடுவானத்தில் வைத்தே எகிப்திய விமானமொன்று அமெரிக்காவால் "ரம்போ" பாணியில் அமெரிக்காவால் திசைதிருப்பப்பட்டிருக்கிறது.

உலகப்பயங்கரவாதியான ரீகன் தனது கையாட்களுக்கும் அரசபயங்கரவாதத்தை மேற்கொள்ள ஆசீர்வதித்திருக்கிறான்.

இதனால்தான் இந்தியஅரசு என்னோடு ஒத்துழைத்தால் ஒரு வருடத்தில் பயங்கரவாதத்தை ஒழித்து விடுவதாக எக்காளமிட்டிருக்கிறான். இந்த விடயத்தில் தான் பெரும் முன்னேற்றம் கண்டிருப்பதாகவும், தற்போது சம்பவங்கள் சிறு குழுநிலையிலேயே இடம்பெற்று வருவதாகவும் பீத்தியிருக்கிறான். அதுமட்டுமல்லாமல் தன்னோடு ஒத்துழைக்கும் இயக்கங்களோடு சேர்ந்து ஏனையவற்றை ஒழித்துவிடப்போவதாகவும் தூற்றைத்திருக்கிறான். இப் பயங்கரவாதத்தை இந்திய அரசு உக்கப்படுத்திவருவதாகவும் தனது எஜமானர்களுக்கு உரைத்திருக்கிறான்.

தமிழ்பேசும் மக்கள்மீது கொலைச் செயல்களை தீவிரப்படுத்துவதன் மூலமும், சிங்கள மக்களிடையேயுள்ள இனவாத உணர்வுகளை பாவித்து தொண்டர்படை என்ற பெயரில் குண்டர்படையை தோற்றுவிப்பதன் மூலமும் தீர்த்துவிடலாம் என மனப்பால் குடித்துவருகிறான் ஜே.ஆர்.

இந்திய அரசு இந்தவிடயத்தில் மெத்தனமாக நடந்துவருவது குறித்து வருத்தமடைகிறோம். இந்திய உபகண்டத்திற்கெதிரான யுத்த நடவடிக்கைகள் தமிழ் மக்களை ஒடுக்குதல் என்ற போர்வையில் நடந்துவருகின்றன. பயங்கரவாதத்தை ஒடுக்குதல் என்ற போர்வையில் பாராளுமன்ற அதிகாரம் சர்வாதிகாரத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. தமிழர்கள் பிரச்சனையை தீர்க்க எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கவில்லையென்றால் சர்வாதிகாரியாக மாறுவேன் என அடிக்கடி பயமுறுத்திவருகிறார்.

இந்திய உபகண்டத்தை சுற்றியுள்ள பிற்போக்கு அரசுகள் சிறீலங்கா பிற்போக்கு அரசுக்கு ராணுவ மற்றும் ஆயுத வசதிகளை அளித்துவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை முற்போக்கு சக்திகள் ஒடுக்கப்படுகின்றன. தனிமைப் படுத்தப்படுகின்றன.

இப்பிரச்சனையையும், பின்னணியையும் தமிழ் பேசும் மக்களின் நலனில் அக்கறை கொண்ட இயக்கங்கள் புரிந்துகொண்டதாகவோ, சரியான அரசியல் திசைவழியை தெரிந்துகொண்டதாகவோ, இதன் அடிப்படையில் ஒற்றுமைப்படுவதாகவோ தெரியவில்லை. பதிலாக கோஷ்டிப் பூசல்களும், தனிநபர் அராஜகமும் மலிந்துவருவதாக உணர்கிறோம்.

● லண்டன் ரைம்ஸ்' பத்திரிகைக்கு ஜே.ஆர். பேட்டி ●

பேச்சு வார்த்தைஎன்ற போர்வையில்சிறீலங்கா அரசு மேற்கொள்ளும் கபட நாடகத்தில் விழிப்பாக இருக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளான

- தமிழர் ஒரு தேசிய இனம்.
- தமிழ் பேசும் மக்களுக்கு பாரம்பரிய தாயகம் உண்டு.
- தமிழ் பேசும் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு.

என்பனவற்றை அங்கீகரிக்காத எந்தத் தீர்வும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையை தீர்க்கப் போவதில்லை. இவ் அடிப்படை உரிமைகளை வற்புறுத்த சகல இயக்கங்களையும் ஒன்றிணையுமாறு வேண்டுகிறோம். தமிழர் நலனில் அக்கறைகொண்ட எந்த இயக்கமும் தனியாக போராட்டம் நடத்தி வெற்றி காணலாம் என நம்பினால் அது வெறும் பகற்கனவே.

எனவே அடிப்படை அரசியல் அம்சங்களில் உடன்பாடு காணும் சகல இயக்கங்களையும் பரந்த முன்னணியில் இணையுமாறு ஈழ விடுதலையின்பேரால் வேண்டுகிறோம். இதற்கான சூழ்நிலைகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்துமாறு வேண்டுகிறோம்.

★ ★ ★

## இறப்பில் ஓர் வர்க்கம்.

சிங்கள 'ஆமி' கொலை செய்யப்பட்டால்
ஒரு லட்சம்
மனைவிக்கு
பிள்ளைக்கு
தாய், தந்தைக்கு
அரசு கொடுக்கும்.
தமிழ்ப் 'போராளி' கொலை செய்யப்பட்டால்
சுவரொட்டி
அஞ்சலி
அனுதாபச்சின்னங்கள்
இன்னும் பல
இயக்கம் படைக்கும்.
'நான்' கொல்லப்பட்டால்
என் உடலைச்சுற்றிக் கழுகுகள்
வட்டமிடும்
நரிகள் ஏப்பம் விடும்
காக்கை இரை மீட்கும். காரணம்.
நான் ஒரு தமிழீழ சாதாரண பிரஜை.

● ● ●

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

Thamil Eelam Liberation Organization

TELO

அன்புடையீர்,

ஸ்ரீ லங்கா அரசின் ஆக்கிரமிப்புப் படை ஆட்சியின் கீழ் அவலமுறும் தமிழீழக் குடி மக்கள் இன்று தாங்கமுடியாத துயரத்தில் மூழ்கியுள்ளனர். தமக்குத் தேவையான அத்தியாவசியமான பொருட்களான உணவு, உடை, இருப்பிடவசதிகள் இன்றி, உயிருக்குக்கூட உத்தரவாதமின்றித் தமது தாய்நாட்டிலேகூட அகதிகளாக வாழ்கின்றனர். 83ஜூலை கலவரத்திற்குப்பின்னர் தொடர்ந்தும் நடக்கும் அழிவை நீங்கள் அவதானித்துக்கொண்டு வருகின்றீர்கள். விடுதலைப்போராளிகள் தமக்-குள்ள ஆசாபாசங்கள் அத்தனையும் இழந்து நாட்டின் விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக்-கொண்டு உயிரைப்பணயம் வைத்துப்போராடி வருகின்றனர்.

இப் போராளிகளுக்காக வெளிநாடுகளில் வாழும் உங்க-ளிடம் பொருளுதவி வேண்டி நிற்கின்றோம், நிச்சயமாக உங்கள் உதவி ஒன்றேதான் எங்கள் போரா-ட்டத்தின் வெற்றியின் தரத்தினை நிச்சயிக்கும். நாள் ஒன்றுக்கு 50p ஐ மட்டும் நீங்கள் எமக்கு உதவினால் போதுமானதாகும்.

இவ்வுதவியைப்பிற்போடும் ஒவ்வொரு நாளும் எம் மக்களின் உயிரை இழக்கக் காரணமாகின்றோம். எனவே விடுதலைக்காக உங்களால் இயன்ற உதவியைத் தாராள-மனதுடன் இன்றே செய்யும்படி தயவோடு வேண்டுகின்றோம்.

நன்றி.

WE ARE WAITING FOR YOUR SUPPORT

WHAT ARE YOU WAITING FOR?.

T.E.L.O. LONDON BRANCH

TELO'S International Information Service

470-5048